# மெட்ரோவில் இசை விழா

சென்னை, டிச. 12–

பயணியரை மகிழ்விக்க, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று, 'ஜாஸ்' இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மெட்ரோ ரயில் திட்டத்தில் நவீன தொழில்நுட்பம், இயக்கம், பாதுகாப்பு, வசதிகள் குறித்து, பயணியர் மற்றும் பொது மக்களுக்கு எடுத்துச்சொல்லும் நோக்கில், சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, தனி இசை கலைஞர்களின் திறமையை ஊக்கவிக்கும் நோக்கில், நேற்று, சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில், 'ஜாஸ்' இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில், 10 பெண் கலைஞர்கள் உட்பட, 20 பேர் பங்கேற்றனர். தமிழ், ஆங்கிலத்தில் பாடல்கள் பாடியும், தனியாக இசை வாத்தியங்கள் இசைத்தும், பயணியரை மகிழ்வித்தனர். இந்நிகழ்ச்சியை, மெட்ரோ ரயில் நிலையம் வழியாக சென்ற, ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பார்த்து ரசித்தனர்.



■ சென்ட்ரல், மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று நடந்த, 'ஜாஸ்' இசை நிகழ்ச்சியில் அசத்திய இசைக்கலைஞர்கள்.